**செய்தி வெளியீடு எண். 597** **நாள்– 19.07.2010**

## 15 கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி ஊராட்சி விருதுகள் மாண்புமிகு துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்

* * * * * * * * * *

திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநில அளவில் முன்மாதிரியாகச் செயல்பட்டு சாதனைகள் புரிந்துள்ள 15 கிராம ஊராட்சிகளுக்கு மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் **“உத்தமர் காந்தி ஊராட்சி விருது”** வழங்கி, தலா 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் கேடயத்தினை கிராம ஊராட்சிக்கும், பதக்கம் மற்றும் சான்றிதழ்களை ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் (19.07.2010) இன்று புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். விருது பெற்ற அனைவருக்கும் தனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

சிறந்த மற்றும் புதுமையான முயற்சிகளை செயல்படுத்தும் கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டினை கௌரவிக்கும் வகையில் உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்படும் என்றும், இவ்விருத்திற்காக ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் 15 கிராம ஊராட்சிகளுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படும் என்றும், 11.08.2006 அன்று சட்டப் பேரவையில் மாண்புமிகு துணை முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து வழங்கப்படும் விருதுக்கு, **“உத்தமர் காந்தி ஊராட்சி விருது”** என முதலமைச்சர் கலைஞர் பெயர் சூட்டினார்.

2006–07ஆம் ஆண்டில் மாநில அளவில் முன்மாதிரியாக அரசின் திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்திச் சாதனைகள் நிகழ்த்தியுள்ள 15 கிராம ஊராட்சிகளுக்கும், 2007–08ஆம் ஆண்டில் 15 சிறந்த கிராம ஊராட்சிகளுக்கும் உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்பட்டது. தற்போது 2008–09ஆம் ஆண்டில் இதே போன்று சிறப்பான முறையில் அரசுத் திட்டங்களைச் செயல்படுத்தி சாதனைகள் நிகழ்த்தியுள்ள 226 கிராம ஊராட்சிகள் குறித்தான பரிந்துரைகள் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் பெறப்பட்டன. அவற்றினை கூடுதல் இயக்குநர் நிலையிலான உயர் அலுவலர்கள் நேரடியாக ஆய்வு செய்து அதிலிருந்து 47 கிராம ஊராட்சிகளை சுருக்கத் தேர்வு (short list) செய்தனர். இதனைத் தொடர்ந்து இந்த 47 கிராம ஊராட்சிகளிலிருந்து 15 சிறந்த கிராம ஊராட்சிகளை உத்தமர் காந்தி ஊராட்சி விருதிற்காக தேர்வு செய்யும் பொருட்டு உரிய பரிந்துரைகள் அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்த பரிந்துரையின் அடிப்படையில், 2008–2009ஆம் ஆண்டிற்கான உத்தமர் காந்தி ஊராட்சி விருது பெறுவதற்குத் தகுதியுடைய 15 கிராம ஊராட்சிகள் மற்றும் அதன் தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

**உத்தமர் காந்தி ஊராட்சி விருது, 2008–09**
**விருது பெறும் ஊராட்சிகள் மற்றும் அதன் தலைவர்கள் விபரம்**

| வ. எண். | தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சி | மாவட்டம் | ஊராட்சித் தலைவர் |
|---|---|---|---|
| 1 | கோட்டவரதம்பட்டி | சேலம் | திரு. பழனி ரத்தினம் |
| 2 | திருப்பணிச்செட்டிக்குளம் | தூத்துக்குடி | திரு. ப. சுயம்புலிங்கம் |
| 3 | வச்சக்காரப்பட்டி | விருதுநகர் | திரு. பா. ஆனந்தராமன் |
| 4 | ரெட்டிப்பட்டி | நாமக்கல் | திரு. பெ. பாலசுப்ரமணியன் |
| 5 | பேச்சிப்பாறை | கன்னியாகுமரி | திரு. எஸ். இராஜன் |
| 6 | பொம்மநாயக்கன்பாளையம் | ஈரோடு | திரு. பி.என். சண்முகத்தரசு |
| 7 | ஒரத்தூர் | கடலூர் | திரு. இரா. செல்வராஜன், |
| 8 | குன்னத்தூர் | கோயம்புத்தூர் | திரு. கே. இராமலிங்கம் |
| 9 | சோ. குப்பம் | விழுப்புரம் | திரு.கே.எஸ். இராஜேந்திரன் |
| 10 | பேரட்டி | நீலகிரி | திருமதி. கே. ராஜேஸ்வரி தேவதாஸ். |
| 11 | மேலப்பெருமழை | திருவாரூர் | திருமதி ஆர். வேதவல்லி |
| 12 | அத்தியூர் | பெரம்பலூர் | திருமதி. தீ. பிரேமா |
| 13 | அரியனேந்தல் | இராமநாதபுரம் | திரு. கி. நந்தகோபாலன் |
| 14 | கலிக்கம்பட்டி | திண்டுக்கல் | திருமதி. அ. புவனேஸ்வரி |
| 15 | பூனப்பள்ளி | கிருஷ்ணகிரி | திரு. சி.எல். ஸ்ரீநிவாச ரெட்டி |

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் திரு. க. அஷோக் வர்தன் ஷெட்டி, மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு.த. உதயச்சந்திரன், ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.